**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பாசனம்-சென்னை ,திருச்சிராப்பள்ளி, மதுரை,பொள்ளாச்சி ஆகிய மண்டலங்களில் ஆறுகள் வடிகால்கள் கால்வாய்கள் குளங்கள் ஆகியவற்றை தூர்வாருதல் கரைகளை பலப்படுத்துதல் கட்டுமான அமைப்புகளை பழுதுபார்த்து சீரமைத்தல் புனரமைத்தல் தரப்படுத்துதல் அடைப்பான்கள் மதகுகள் பழுது பார்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு 2001-2002இல் ரூ..35.00 கோடி மதிப்பீட்டிற்கு நிதி அனுமதித்தல்.ஆணை வெளியிடப்படுகிறது

---

**பொதுப்பணி(க்யூ2)துறை**

**அரசாணை(நிலை) எண். 74**
**நாள்: 23.02.2001**
படிக்க:

1) முதன்மை தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை சென்னை கடிதம் எண் எஸ் 7(4)/45801/*2000 நாள் 5.1.2001

2) தலைமைப்பொறியாளர், நீர்லள ஆதார அமைப்பு பொள்ளாச்சி மண்டலம்ம் கடிதம் தொநுப/உசெபொ/உபொ/கோ 19556 நாள் 1.2.2001 மற்றும் 19.2.2001

3) தலைமைப்பொறியாளர், நீர்லள ஆதார அமைப்பு, மதுரை மண்டலம் கடிதம் எண்.வஅ1/7158/2000 நாள் 9.2.2001 மற்றும் 12.2.2001

4) தலைமைப்பொறியாளர், நீர்லள ஆதார அமைப்பு,, சென்னை மண்டலம் கடிதம் எண்.டி2/உசெபொ 3/தூர்வாருதல் கோ 2000 நாள் 19.2.2001

5) தலைமைப்பொறியாளர், நீர்லள ஆதார அமைப்பு, திருச்சி மண்டலம் கடிதம் எண். 94/அரசு/கோ 17/2001-2002 வஅ2/ நாள் 9.2.2001

6) கண்காணிப்புப் பொறியாளர், கீழ்காவிரி வடிநில வட்டம் கடிதம் எண்..370 எம்/2001 கோ 294-டி/இவஅ8/நாள் 16.2.2001

-0-

**ஆணை:**

ஆறுகள் வடிகால்கள் குளங்கள் மற்ற பிற பாசன ஆதாரங்கள் ஆகியவற்றை தூர்வாருதல், மேம்படுத்துதல் தரப்படுத்துதல்கள் ஆகிய பணிகள் 1997-98 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டில் (2000-2001) நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ( சிகூஷீவீமீவீநீணீறீறீஹ் கூஷீமீஸ்வீமீஷ் ) ஆய்வு செய்தபொழுது தூர்வாரும் பணிகளுக்கான ஒப்புதல் வழங்குவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டதால் தூர்வாரும் பணி மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என சுட்டிகாட்டினார்கள். ஆகவே இத்தாமதம் வரும் ஆண்டில் (2001-2002) தவிர்க்கப்பட வேண்டும் என்றால் நீர்வள ஆதார அமைப்பின் மண்டல தலைமைப் பொறியாளர்களிடமிருந்து தூர்வாரும் பணிகளுக்கான செயற்குறிப்புகளை டிசம்பர் 2000க்குள் அரசுக்கு பெறப்பட்டு 2001-சனவரி மாதத்தில் ஆணைகள் வெளியிடப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

3. எனவே மண்டல தலைமைப்பொறியாளர்கள் அனைவரும் தூர்வாரும் பணிகளுக்கான செயற்குறிப்புகளை நீர்வள ஆதார அமைப்பு முதன்மை தலைமைப்பொறியாளர் மூலம் அரசுக்கு 15.12.2000க்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள் . மண்டல தலைமைப் பொறியாளர்களிடமிருந்து தூர்வாரும் பணிகளுக்கான செயற்குறிப்புகளை தொகுத்து 2001-2002ஆம் ஆண்டிற்கு நீர்வள ஆதார அமைப்பின் நான்கு மண்டலங்களுக்கும் தூர்வாரும் பணிகளுக்காக ரூ 226.53கோடி நிதி ஒதுக்கீடு கோரி முதன்மை தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு அரசுக்கு செயற்குறிப்பு சமர்ப்பித்தார்கள்.

4. 2001-2002-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு இடைக்கால மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகளுக்கென ரூ 35.00 கோடி மட்டும் நிதி ஒதுக்கீடு உள்ளதால் இத்தொகைக்கு மட்டும் மதிப்பீடு அனுப்புமாறு மண்டல தலைமைப்பொறியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.மேலும் திருவாரூர் மாவட்டத்திற்கு தூர்வாரும் பணிகளுக்கு கூடுதல் நிதி வேண்டி திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அரசினை வேண்டியிருந்தார். ஆதாலால் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் விவாதித்து செயற்குறிப்புகள் அனுப்புமாறு திருச்சிராப்பள்ளி மண்டல தலைமைப்பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இவ்வாறு விவாதித்து திருத்திய செயற்குறிப்புகள் திருச்சிராப்பள்ளி மண்டல தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். மேலும் சென்னை, மதுரை, பொள்ளாச்சி ஆகிய மண்டலங்களின் தலைமைப்பொறியாளர்கள் 2001-2002இல் தூர்வாருதல் மற்ற பிற பணிகளுக்கு பட்டியல் மற்றும் மதிப்பீடு அரசுக்கு அனுப்பியுள்ளார்கள்.. முந்தைய ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்ட தூர்வாருதல் மற்றபிற பணிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைக்கும் நிதி வேண்டி அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார்கள். மண்டலத் தலைமைப்பொறியாளர்கள் அனுப்பியுள்ள செயற்குறிப்புகளில் நிலுவைத்தொகை, 2001-2002இல் எடுக்கப்பட விருக்கும் புதிய பணிகளின் மதிப்பீடு கீழ் வருமாறு:

| வ.. எ ண் | மண்டலத்தின் பெயர் | முந்தைய ஆண்டுகளில் தூர்வாரும் பணிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை | 2001-2002இல் எடுக்கப்படும் புதுப்பணிகள் மதிப்பீடு<br><br>**ரூபாய் இலட்சங்களில்** | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | இல்லை | 600.00 | 600.00 |
| 2 | **திருச்சிராப்பள்ளி மண்டலம்**<br>தூர்வாரும் பணிகள்<br>1999 வெள்ள நிவாரப்பணிகள் | <br>210.00<br>225.00<br>435.00 | 2009.00 | 2444.00 |
| 3 | மதுரை மண்டலம் | 72.00 | 485.12 | 557.12 |
| 4 | பொள்ளாச்சி மண்டலம் | 282.00 | 300.50 | 582.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | 789.00 | 3394.62 | 4183.62<br><br>(அ) 41.84<br>கோடி ரூபாய் |

மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் அனுப்பியுள்ள 2001-2002 இல் எடுக்கப்படவிருக்கும் பணிகள் மற்றும் இதற்கான மதிப்பீடு விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. மேலே கூறப்பட்டுள்ள செயற்குறிப்புகளை அரசு கவனமாக பரிசீலித்த பிறகு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. 2001-2002 வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.35.00 கோடித்தொகையை சென்னை, மதுரை, மற்றும் பொள்ளாச்சி மண்டலங்களுக்கு தலா ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) வீதமும் திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு ரூ.20.00 கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) பத்தி 4ல் கண்டுள்ளவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்குகிறது. கடந்த ஆண்டுகளில் ஒப்பந்தக்காரர்களின் இடையே கடும்போட்டி நிலவியதால் ஒப்பந்தப்புள்ளியில் சேமிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தால் ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒதுக்கியுள்ள தொகைக்குள்ளாக நான்கு மண்டலத்திற்கும் சேர்த்தும் மொத்தம் ரூபாய் முப்பத்தைந்து கோடிக்குள் செலவு செய்யப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் பத்தி 4இல் கண்டுள்ளவாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நிலுவைத்தொகை கொடுக்கவும் புதியபணிகள் மேற்கொள்ளவும் ரூ.41.84 கோடிக்கு (ரூபாய் நாற்பத்தி ஒரு கோடி எண்பத்தி நான்கு இலட்சங்கள் மட்டும்)அரசு ஒப்புதல் வழங்குகிறது. தளத்தில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் தேர்வு நிறைவேற்றப்பட வேண்டும் என்று அனைத்து மண்டலத் தலைமைப்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6.ஆறுகள். கால்வாய்கள் ஆகியவற்றை தூர்வாரும் பணிகள் மேம்படுத்தும் பணிகள் ஏற்கனவே அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் தற்சமயம் மேற்கொள்ளப்படுவதாலும் பணிகள் திருப்திகரமாக நிவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கு இப்பணிகள் குறித்து கிராமங்களில் தகுந்த அளவில் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.. பணிதளத்தில் பணி குறித்த விவரங்கள் குறிப்பிட்டு பலகை வைப்பதுடன் பணிகளுக்கான விவரங்கள் கிராம சபைகளுக்கு தெரிவிக்கப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது. மேலும் பணிகள் குறித்தான விவரங்கள் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் மாவட்ட அளவிளான இணைதளம்(கீமீதீ-உவீமீ), பொதுப்பணித்துறை இணைதளம் ஆகியவற்றில் இடம்பெற மண்டல தலைமைப்பொறியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

7. பணிகள் விரைந்து முடிப்பதற்கு தலைமைப்பொறியாளர்கள்அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், பணி முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு வாரம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு 2000-2001இல் இது பொருளில் வாரந்திர அறிக்கை அனுப்பும் படிவத்தில் தவறாமல் நிகரி மூலம் அனுப்ப அனைத்து மண்டல தலைமைப்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்

8. பத்தி 5இல் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ 35.00 கோடிக்கான செலவினத்தை கீழ்க்கண்ட தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்

'4701 பெரிய நடுத்தரப் பாசனத்திட்டங்கள் குறித்த மூலதனச்செலவு-01.பெரும்பாசனம்-வணிகத்தன்மை வாய்ந்தது-211. வாய்க்கால் திட்டத்தை புதுப்பித்தல்-ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் மிமி மாநிலத்திட்டம்-யிகி கால்வாய்-16. பெரும் பணிகள் (த.தொ.கு 4701 01 211 யிகி 1604)'

9. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண் 517/திஷி/றி/2001 நாள் 21.2..2001 இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.பி.குப்தா

அரசு செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை.சென்னை-5
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை, சென்னை மண்டலம், சென்னை.5
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை, பொள்ளாச்சி மண்டலம், கோயம்புத்தூர்
தலைமைப்பொறி`ாளர், நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை, திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி
தலைமைப்பொறியாளர்,நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரை
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்),
நீர்வள ஆதார அமைப்பு,பொதுப்பணித்துறை, சென்னை-5
மாநில கணக்காயர்,சென்னை-18(பெயர் உறையில்)
மாநில கணக்காயர்,சென்னை-35(பெயர் உறையில்)
மாநில கணக்காயர்,சென்னை-6(பெயர் உறையில்)

நகல்:

செயலாளர் நிதித்துறை, சென்னை..9
செயலாளர்,பொதுப்பணித்துறை,சென்னை.9
சிறப்பு செயலாளர், பொதுப்பணித்துறை .சென்னை..9
பொதுப்பணி மற்றும் வனத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
செயலாளர், முதலமைச்சர் செயலகம், சென்னை.9
முதலமைச்சர் அலுவலகம்,சென்னை.9
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை,சென்னை.9
அனைத்துப் பாசனப்பிரிவுகள்,பொதுப்பணித்துறை, சென்னை-9
இருப்புக்கோப்பு /உபரி நகல்

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

இணைப்பு

**சென்னை மண்டலம்**

தூர்வாரும் பணிகள் 2001-2002 ல் எடுத்துக் கொள்ளும் பணிகளின் பட்டியல் பொதுவான சுருக்கம்

| வ..எண் | மாவட்டத்தின் பெயர் | தூர்வாரப்பட வேண்டிய பணியின் எண்ணிக்கை | தூர்வாரும் பணியின் நீளம் (கி..மீ) | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடலூர் | 2 | 34.60 | 200.00 |
| 2 | வேலூர் | 61 | 163.00 | 200.00 |
| 3 | திருவண்ணாமலை | 24 | 46.90 | 40.00 |
| 4 | விழுப்புரம் | 11 | 36.60 | 30.00 |
| 5 | தருமபுரி | 5 | 20.60 | 50.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | காஞ்சிபுரம் | 10 | 48.60 | 40.00 |
| 7 | திருவள்ளூர் | 9 | 45.28 | 40.00 |
| | மொத்தம் | 122 | 395.58 | |

(ரூபாய் ஆறு கோடி மட்டும்)

**திருச்சிராப்பள்ளி மண்டலம்**

**தூர்வாரும் பணிகள் 2001-2002 ல் எடுத்துக் கொள்ளும் பணிகளின் பட்டியல்**

**பொதுவான சுருக்கம்**

**அ. காவிரி கழிமுகப் பகுதி**

ரூபாய் இலட்சத்தில்/நீளம் கிலோ மீட்டரில்)

| | | தஞ்சாவூர் மாவட்டம் | | | திருவாரூர் மாவட்டம் | | | நாகப்பட்டினம் மாவட்டம் | | | புதுக்கே மாவட்ட |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | வகைகள் | எண்ணிக்கை | நீளம் | தொகை | எண்ணிக்கை | நீளம் | தொகை | எண்ணிக்கை | நீளம் | தொகை | எண்ணிக்கை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | அடைப்பு பலகைகள் | 40 | - | 175.02 | 10 | - | 36.78 | 11 | - | 36.20 | 1 |
| 2 | கட்டுமானம் | 53 | - | 262.79 | 42 | - | 222.01 | 52 | - | 208.20 | 2 |
| 3அ | ஆறுகள் | 6 | 23.60 | 53..05 | 7 | 14..40 | 28.40 | 10 | 36.35 | 40.00 | - |
| 3 ஆ | வடிகால் | 19 | 90.79 | 89.69 | 34 | 180.40 | 88.05 | 37 | 254.25 | 108.73 | 1 |
| 3இ | வாய்க்கால் | 21 | 160.70 | 63..75 | 41 | 293.75 | 130.76 | 46 | 386.75 | 144.87 | 1 |
| 3ஈ | ஏரிகள் | 5 | - | 6.70 | 2 | - | 14.00 | - | - | - | 4 |
| | கூடுதல் | 144 | 275.09 | 651.00 | 136 | 488.55 | 520.00 | 156 | 677.35 | 538.00 | 9 |

திருச்சிராப்பள்ளி மண்டலம்

ஆ. இதர பகுதிகள்

ரூபாய் இலட்சத்தில்

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | ஓமலூர் வட்டம் டால்மியாபுரம் பாப்பான் ஏரி மற்றும் அழகு சமுத்திரம் ஏரி உள்ளிட்ட ஏழு ஏரிகளுக்கிடையே வழங்கு வாய்க்கால்களை தூர்வாரும் பணி | 32.00 |
| | தாரமங்கலம் சட்டமன்ற தொகுதியில் மரமங்கலம் ஏரி மற்றும்பெரியேரிபட்டி ஏரி உள்ளிட்ட நான்கு ஏரிகளுக்குயிடையே தூர்வாரும் பணி | 50.00 |
| | மேட்டுர் இடது கரை வாய்க்காலில் தூர்வாரி மதகு மற்றும் கட்டுமானம் சீரமைத்தல் | 30.00 |
| | மேட்டூர் இடதுகரை வாய்க்காலில் கடைமடை பகுதியில் தூர்ர்வாருதல் மதகு மற்றும் கட்டுமானம் சீரமைத்தல் | 20.00 |
| | புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மற்றும் கட்டளை மேட்டு வாய்க்காலில் தூர்வாருதல் | 30.00 |
| | புள்ளம்பாடி வாய்க்காலில் தூர்வாருதல் | 30.00 |
| | மருகைகுளம் ஏரியில் தூர்வாருதல் | 15.00 |
| | கண்ணுத்து அணைகட்டில்கட்டுமானம் சிறப்பு சீரமைத்தல் | 25.00 |
| | அத்தியூர் ஏரி மற்றும் வழங்கு வாய்க்கால் தூர்வாருதல் | 15.00 |
| | சிந்தாமணி ஓடையில் வெளிப்போக்கி மேல் நடைபாலம் கட்டுதல் | 35.00 |
| | கூடுதல் | 282.00 |

**சுருக்கம்**

ரூபாய் இலட்சத்தில்

அ. காவிரி கழிமுக பகுதி மதிப்பீடு ரூ.1727.00

ஆ.இதர பகுதிகள் மதிப்பீடு ரூ. 282.00

------------

மொத்தம் ரூ.2009.00

-------------

(ரூபாய் இருபது கோடி ஒன்பது இலட்சம் மட்டும்)

**மதுரை மண்டலம்**

தூர்வாரும் பணிகள் 2001-2002 ல் எடுத்துக் கொள்ளும் பணிகளின் பட்டியல் பொதுவான சுருக்கம்

| வ..எண் | மாவட்டத்தின் பெயர் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | மதுரை | 11 | 75..30 |
| 2 | தேனி | 2 | 26..80 |
| 3 | திண்டுக்கல் | 2 | 20.00 |
| 4 | சிவகங்கை | 12 | 70.50 |
| 5 | இராமநாதபுரம் | 14 | 42.28 |
| 6 | விருதுநகர் | 7 | 52.00 |
| 7 | தூத்துக்குடி | 10 | 91.00 |
| 8 | திருநெல்வேலி | 8 | 64.54 |
| 9 | கன்னியாகுமரி | 7 | 42.70 |
| | மொத்தம் | 73 | 485.12<br>அல்லது ரூபாய் 4.85 கோடி |

(ரூபாய் நான்கு கோடி எண்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்)

**பொள்ளாச்சி மண்டலம்**

**தூர்வாரும் பணிகள் 2001-2002 ல் எடுத்துக் கொள்ளும் பணிகளின் பட்டியல்**

| வ.ரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | கீழ்பவானி பிரதான வாய்க்கால் மைல் 39/2-ல் உள்ள பாலத்தை (ஙிக்ஷீவீபீரீமீ) மறு கட்டுமானம் செய்தல் | 53.00 |
| 2 | கீழ்பவானி பிரதான வாய்க்கால் மைல்11/0 முதல் 11/4 வரையில் உள்ள வலுவற்ற பகுதிகளில் பாதுகாப்பு பணி செய்தல் | 18.00 |
| 3 | கீழ்பவானி பிரதான வாய்க்கால் மைல் 63/4முதல் 64/1 வரையில் உள்ள வலுவற்ற பகுதிகளில் பாதுகாப்பு பணி செய்தல் | 18.00 |
| 4 | சென்ன சமுத்திரம் கிளை வாய்க்கால் மைல் 11/0 முதல் 14/4 வரையில் உள்ள பகுதிகளில் உள்ள வாய்க்கால் மற்றும் குறுக்கு கட்டுமான பகுதிகளை சீரமைக்கும் பணி செய்தல் | 18.00 |
| 5 | கீழ்பவானி பிரதான வாய்க்கால் மைல் 80/5முதல் 81/5 வரையில் உள்ள பகுதிகளில் வாய்க்கால் மற்றும் குறுக்கு கட்டுமான பகுதிகளை சீரமைக்கும் பணி செய்தல் | 9.00 |
| 6 | கீழ்பவானி பிரதான வாய்க்கால் மைல் 117/5முதல் 117/6 வரையில் உள்ள வாய்க்கால் மற்றும் குறுக்கு கட்டுமான பகுதிகளை சீரமைக்கும் பணி செய்தல் | 9.00 |
| 7 | தடப்பள்ளி வாய்க்கால் மைல் 12/7 முதல் கடைகோடி வரையில் உள்ள பகுதிகளில் குறுக்கு கட்டுமான பகுதிகளுக்கு பழுது பார்க்கும் பணி மற்றும் மைல் 44/0 முதல் கடைக்கோடி வரையிலும் கூகலூர் கிளை வாய்க்கால் மைல் 2/2ல் உள்ள பகுதிகளிலும் உள்ள கரைகளை பலப்படுத்தும் பணி | 45.00 |
| 8 | அரக்கன்கோட்டை வாய்க்கால் மைல் 14/0 முதல் 20/1 மற்றும் பெருமுகைஅத்தானி வாய்க்கால் மைல் 0/0 முதல் 5/6 மற்றும் வாணிப்புதூர் கிளை வாய்க்கால் மைல் 0/0 முதல் 4/0 வரையிலும் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள மதகுகளை மறுகட்டுமானம் பணி செய்தல் மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் மைல் 15/3 முதல் 17/1 வரையிலும் பெருமுகை அத்தானி வாய்க்கால் மைல் 3/1 முதல் 5/1 வரையிலும் வாணிப்புதூர் கிளை வாய்க்கால் மைல் 0/0 முதல் 2/0 வரையிலும் உள்ள பகுதிகளில் கரைகளை பலபடுத்தும் பணி செய்தல் மற்றும் அரக்கன் கோட்டை கால்வாயில் மைல் 6.2.200ல் உள்ள வாணிப்புதூர் மேல் நீர்பாலம் (அக்யுடெக்ட்) பழுது பார்க்கும் பணி மற்றும் பெருமுகை அத்தானி வாய்க்கால் மைல் 1.3.252ல் அமைந்துள்ள அடி சுரங்க பாலத்தை பழுது பார்க்கும் பணி(அண்டர்டனல்) | 18.00 |

| | | |
|---|---|---|
| 9 | **கரூர் மாவட்டத்தில் அமராவதி ஆற்றின் பழைய வாய்க்கால்களில் செய்யப்படும் வேலைகளின் விபரம்**<br><br>கரூர் வட்டத்தில் உள்ள திருமாநிலையூர் வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்களில் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 9.00 |
| 10. | கரூர் வட்டத்தில் உள்ள சனப்பிரட்டி வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்களில் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 5.00 |
| 11. | கரூர் வட்டத்தில் உள்ள புலியூர்வாய்க்காலில் தூர்வாருதல், மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 4.00 |
| 12. | கரூர் வட்டத்தில் உள்ள பள்ளபாளையம் வாய்க்கால் மற்றும் பஞ்சமாதேவி சோமூர் மற்றும் கோயம்பள்ளி கிளை வாய்க்காலில் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 15.00 |
| 13. | **ஈரோடு மாவட்டத்தில் அமராவதி ஆற்றின் பழைய வாய்கால்களில் செய்யப்படும் வேலைகளின் விபரம்**<br>தாராபுரம் வட்டத்தில் தாராபுரம் வாய்க்காலில் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகையை சரி செய்தல் | 5.00 |
| 14 | தாராபுரம் வட்டத்தில் உள்ள கொளிஞ்சிவாடி வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்களில் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 4.00 |
| 15 | தாராபுரம் வட்டத்தில் அலங்கியம் வாய்க்கால் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 4.00 |
| 16. | தாராபுரம் வட்டத்தில் தளவாய்ப்பட்டினம் வாய்க்கால் தூர்வாருதல் மதகுகளை சீரமைத்தல் மற்றும் மதகு பலகைகளை சரி செய்தல் | 4.00 |
| 17. | கதிரையன்குளம் மற்றும் வழிந்தோடி கால்வாய் சீர்திருத்தும் பணி | 30.00 |
| 18. | கரூர் மாவட்டம் பள்ளபாளையம் அணையின் இடதுபுறக்கால்வாயில் 12.50 கி.மீ முதல் 35.85கி.மீ வரை 1996-97 வருடத்தில் களைகளை எடுத்து கால்வாய் மறுசீரமைத்தல்பணி | 19.50 |
| 19. | கரூர் மாவட்டம் பள்ளபாளையம் கால்வாயின் கிளைக்கால்வாய்களில் 1996-97 வருடத்தில் களைகளை எடுத்து கால்வாய் மறு சீரமைத்தல் பணி | 5.00 |
| 20. | கரூர்மாவட்டம்கட்டளைவலதுபுறக்கால்வாய் 0/0 முதல் 6.00 கி.மீ வரை 1996-97 வருடத்தில் களைகள் எடுத்து கால்வாய் மறுசீரமைத்தல் | 6.50 |
| 21. | கரூர் மாவட்டம் மணவாளி வலது புறக்கால்வாயில் 40கி.மீ முதல் 70கி.மீ வரை 1996-97 வருடத்தில் களைகள் எடுத்து கால்வாய் மறு சீரமைத்தல். | 1.50 |
| | மொத்தம் | |

(ரூபாய் மூன்று கோடி ஐம்பது ஆயிரம் மட்டும்)

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்